10th March 1955]

MR. SPEAKER :—" நீங்கள் personal explanation கூறவேண்டிய தில்லை எதிர்கட்சித் தலைவர்தான் ஏதாவது இருந்தால் personal explanation பண்ணவேண்டும்."

SRI S. RAMALINGAM :—" எதிர்கட்சித் தலைவர் பேசும்போது கனம் மந்திரி அவர்கள் தஞ்சை ஜில்லாவில் ஏக்கருக்கு 14 மூட்டை உற்பத்தியாகும்போது இன்னும் 10 மூட்டை அதிகமாக உற்பத்தி செய்தால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுமென்று சொன்னார். அப்போது எங்கள் கட்சித் தலைவர், ' இப்போதே 2 மூட்டை விலை குறைந்து விட்டபடியினால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படியிருக்க இன்னும் 10 மூட்டை அதிகம் உற்பத்தி செய்தால் விலைவாசிகள் இன்னும் குறைந்து (விவசாயிகள்) படுபாதாளத்திற்கு போய்விடுவார் ' என்று சொன்னார். என்னை பொறுத்த வரையில் நான் சொல்லுகிறேன், இப்போது உணவு கஷ்டம் நீங்கி விட்டது என்று அர்த்தம் இல்லை. இன்னும் கட்டுப்பாடு ஏற்படலாம். அப்படி இருக்கும் போது நெற்களஞ்சியமாக தஞ்சை ஜில்லாவில் கரும்பு உற்பத்தி செய்தால் அரிசி கட்டுப்பாடு ஏற்பட்டதா அப்படி ஏற்பட்டால் அதை மாற்ற சர்க்கார் என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதே நான் கேட்ட கேள்வி."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" நான் நேற்றைய தினம் சொன்னேன் விவசாய பொருள்களின் உற்பத்தியை ' regulate ' பண்ண வேண்டி இருக்கும் என்று. தஞ்சை ஜில்லாவில் 13 லக்ஷம் ஏக்கரில் நெல் சாகுபடி ஆகிறது. அந்த 13 லக்ஷம் ஏக்கரில் சுமார் 2,000 ஏகரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. 13 லக்ஷம் ஏக்கரில் நெல் சாகுபடி ஆகும்போது 4,000 ஏக்கரில் கரும்பு சாகுபடி ஆனால் நெல் விளைச்சல் பாதிக்கப்படாது என்று சொல்லுவேன்."

Appointment of Judicial Sub-Magistrates

* 1238 *Q.*—SRI K. ARANGANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was any selection of candidates for training as Judicial Sub-Magistrates recently;

(*b*) if so, the number of persons selected; and

(*c*) the number from (i) the Bar and (ii) the High Court establishment?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) Yes.

" (*b*) Twenty-six.

" (*c*) (i) Sixteen;

(ii) one."

SRI V. R. NAGARAJAN :—" Sir, of the candidates selected, may I know how many are Harijans and how many belong to the Backward Classes? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I do not have the figures with me now."